இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,515 — AUGUST 2, 1912.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws made by the Sanitary Board, under the Small Towns Sanitary Ordinance, in respect of the Town of Weligama, Matara District.]

1892 ம் ஆண்டு தொடக்கம் 1909 ம் ஆண்டு வரைக்கும் உள்ள சிறு நகரசுகசங்கக் கட்டளைச்சட்டத்தின் 9 E ம் பிரிவின் இரண்டாம் உபபிரமாணத்தை அனுசரித்து அதன்கீழ் மாத்தறை டிஸ்திறிக்கில் வலிகாமமென்னும் நகரைக்குறித்துத் தென் மாகாணம் மாத்தறை டிஸ்திறிக்கு சுகசங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு கீழே காணப்படும் உபபிரமாணங்களை உச்சிதந்தங்கிய அரசாட்சி பரிபால்ன உத்தியோகஸ்தரவர்களால் சட்டபரிபாலன சபையாரது புத்திமதியுடன் அங்கீகரிக்கப்பட்டதென பலரும் அறியும்படியாக இத்தால் பிரசிரிக்கப்படுகிறது.

தேசாதிபதியின் கட்டளைப்படி,

ஹியூ கிளிவ்வோட்,
அக்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1912 ம் ஞூ ஜூன் (ஆனி)மீ 15 ந வ.

அத்தியாயம் I. பிரிவு 9 E (2) (a).

கூட்டங்களின் கவனிக்கப்படவேண்டிய நேரமும் இடமும் ஒழுங்குகளும்.

1. சங்கத்தாரின் நடபடியான கூட்டங்கள் குறைந்த கணக்கில் இவ்விரண்டு மாசத்துக் கொவ்வொரு முறையும் சங்கத்தாரின் நிச்சயிப்பினுல் காலத்துக்குக் காலம் நியமிக்கும்நேரத்திலும் இடத்திலுங் கூடப்படும். ஆனுல் சங்கத்தார் கூட்டத்தை வேறொரு நாளைக்கு அல்லது நேரத்துக்கு பின்போடுவது நீதியாகும்.

2. சங்கத்தின் கூட்டங்களுக்குச் சேர்ந்த சகல முகாந்தரங்களுக்கும் அங்கத்தவர்களின் மூப்புமுதன்மையும் பின்வரும் வகையாகும்:—

(a) உத்தியோகமாயில்லாத அக்கிராசனரும்;

(b) "கெசற்" பத்திரிகையில் பிரசிரிக்கப்பட்டபடி தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டவர்களே அங்கத்தவர்கள்.

3. அக்கிராசனர் ஒழுங்கைக் காத்து ஒழுங்கைப்பற்றித் தர்க்கிக்கப்பட்ட சகல விஷயங்களிலும் தீர்மானஞ் செய்வார்.

4. பொதுவான அல்லது விசேஷமான ஏதொரு கூட்டத்திற்கும் நியமிக்கப்படும் நேரத்திலுங் காலத்திலும் அங்கத்தவர்கள் கூடி அதில் அக்கிராசனதிபதியாக வேண்டியவர் அக்கிராசனத்திருந்து அலுவலை நடத்தத் தொடங்குவார். கூட்டத்தின் நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணித்தியாலத்தில் நிருபாகதொகை சமுகமாயில்லாதிருந்தால் கூட்டத்தை பின்போடப்படும். அதுவோர் பொதுவான கூட்டமாகில் அடுத்த பொதுவான கூட்ட நாளுக்கும் ஓர் விசேஷ கூட்டமாகில் தினங்குறியாமலும் பின்போடப்படும்.

5. ஒரு கேள்வியைக் கேட்கும் அல்லது மோசனைகொடுக்கும் அங்கத்தவர் சங்கத்தாரின் விசேஷ உத்தரவின்படி அவசியநிமித்தம் அல்லது உத்தரிப்பு நேரத்திலன்றி அக்கேள்வி அல்லது மோசனின் அறிவித்தலை சங்கத்தின் சில முற்கூட்டத்தில் அறிவிக்கவேண்டியது அல்லது கேள்விகேட்க அல்லது மோசன்கொடுக்க நினைத்திருக்கும் தினத்துக்கு நாலு நாளைக்கு முன் எழுத்தில் அறிவிக்கவேண்டியது.

6. அவ்வகை அறிவித்தல் கொடுக்கும் ஒவ்வொரு அங்கத்தவரும் அக்கேள்வி அல்லது மோசனின் ஒரு பிரதியை அக்கிராசனருக்குக் கொடுப்பார்.

7. கூட்டத்தில் கேட்கப்படும் சகல கேள்விகளும் கொடுக்கப்படும் மோசன்களும் சங்கத்தார் ஒற்றுமையாய் வேறுவிதம் தீர்த்தாலன்றி அவைகள் குறித்த நொத்தீஸ் பிரகாரமே யிருக்கும்.

8. ஒரு கூட்டத்தில் தள்ளப்பட்ட ஒரு மோசன் குறைந்தகணக்கில் மூன்று மாசத்துக்குமுன் திரும்பக் கொண்டுவரப்படாது. சங்கத்தின் ஒரு கூட்டத்தில் நிருவகிக்கப்பட்டதற்கு ஏதொரு வகையாலும் மாறுன யாதொரு மோசனும் சிறுதுகாலம் செல்லமுன் ஏற்கப்படமாட்டாது.

9. ஒரு பிட்டிசம் அல்லது கடிதம் கொடுக்கும் அங்கத்தவர் அதன் அடக்கம் முழுமையும் கண்ணியமுடையதாயிருப்பதற்கு உத்தரவாதியாவார். எழுதுவோரின் நாமமும் விலாசமும் தெளிவாய் வரையப்பட்டாலன்றி யாதொரு பத்திரமும் சங்கத்தின்முன் வைக்கப்படாது.

10. பிட்டிசம் அல்லது காயிதங் கொடுக்கும்போது அதன் தாற்பரியம் சுருக்கமாய் காட்டப்பட வேண்டியது. யாதொரு அங்கத்தவரின் துணைசெய்யப்பட்ட "மோசன்" என்னுங் கேள்வி அப்பத்திரம் வாசிக்கப்பட வேண்டியதோ அல்லவோ என்ற கேள்வி போடப்படும்.

11. பொதுவான கட்டளைகளின் வேலைகள் பின்வரும் ஒழுங்கின்படி நடத்தப்படும்:—

(a) முந்தின கூட்டத்தின் குறிப்புகள் வாசித்துத் தேவையானுல் திருத்தப்பட்டு உறுதியாக்கப்படும்.

(b) சங்கத்தாருக்கு விலாசமிடப்பட்ட விண்ணப்பங்கள் பிட்டிசங்கள் அல்லது மற்றுங் கடிதங்கள் கூட்டத்தின் முன்வைக்கப்பட்டு அவைகளில் கட்டளைகள் பண்ணப்படும்.

(c) மறு வேலைகள் கீழேகுறிக்கப்படும் கட்டளைப்புஸ்தகத்தில் விதிக்கப்பட்டபடி கவனிக்கப்படும்.

12. ஒரு கட்டளைப்புஸ்தகம் வைக்கப்படும். அதில் ஒவ்வொரு கூட்டத்திலும் உத்தரிப்புக்கு எடுக்கவேண்டிய விஷயங்கள் முறையே பதியப்பட்டு இலக்கமிடப்படும். குறிப்புப்புஸ்தகம் என்று சொல்லப்படும் வேறொரு புஸ்தகம் வைக்கப்படும், அதில் ஒவ்வொரு கூட்டமிருக்குங் காலத்தில் நடந்தேறுஞ் சமாச்சாரங்கள் சம்பவிக்குமுறையே பதியப்படும்.

*அத்தியாயம் II. பிரிவு 9 E (2) (b).*

(b) பட்டணத்தின் அல்லது கிராமத்தின் தெருக்கள் ரோட்டுகள் வாய்க்கால்கள் பாலங்களை உண்டாக்குவதற்கும் பழுதுபார்ப்பதற்கும் துப்புரவுபண்ணுவதற்கும் நீர்பாச்சுவதற்கும் வெளிச்சம் வைப்பதற்காகவும்.

1. பகிரங்க வேலைக்காகப் பணங்களின் நியோகிக்கப்படும் சகல தொகைகளும் முன்னமே ஆயத்தமாக்கி சங்கத்தாரால் அநுமதிக்கப்பட்ட மதிப்புகளில் விதிக்கப்படும்.

2. சங்கத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் அல்லது போடவரும் தெருக்களின் சமீபத்தில் அல்லது அருகாண்மையாய் உள்ள காணியில் தேவையான தக்க வேலைகாரர் கூலிகள் தொழிலாளர் வண்டிகள் மிருகங்களும் மற்றுங் கருவிகளுடனும் காலமே 7 மணிக்கும் சாயந்தரம் 5 மணிக்குமிடையில் உட்செல்லவும் அங்கே யாதொரு தெருவை அடையாளம்பண்ணவும் அழக்கவும் உண்டாக்கவும் வேலைசெய்யவும் திறக்கவும் மாற்றவும் திருப்பவும் பழுதுபார்க்கவும் துப்புரவுபண்ணவும் திருத்தவும் அல்லது வேலிஅடைக்கவும் அல்லது அங்கேயுள்ள அல்லது அதற்குச்சேர்ந்த யாதொரு பாலத்தை வேலியை மதவை வரம்பை அகளை திருத்துவதற்கான எல்லாச்செயல்கள் காரியகருமங்களை நிறைவேற்ற அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கொள்கைக்கமைய யாதொரு காரியகவ்வைகளை நிறைவேற்றுவதற்காய் எழுத்தில் தத்துவங்கொடுக்கப்பட்ட யாதொரு ஆள் அல்லது ஆட்களுக்கு நீதியாகும்.

3. அவ்வகையிருக்கப்பட்ட அல்லது வைக்க எண்ணப்பட்ட தெருவை அடையாளப்படுத்துவதில், அழப்பதில் உண்டாக்குவதில், வேலைசெய்வதில், திறப்பதில், மாற்றுவதில், திருப்புவதில், புதுப்பிப்பதில், துப்பரவுபண்ணுவதில்' அல்லது திருத்துவதில், அல்லது அங்குள்ள அல்லது அதைச்சேர்ந்த பாலம், வேலி, மதவு, வரம்பு, அல்லது அகளைக்' கட்டுவதில், அழிப்பதில், புதுப்பிப்பதில், அல்லது திருத்துவதில் மேற்சொல்லியபடி தத்துவம் அழிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்களுக்கு அவ்விடத்தில் அல்லது சமீபத்திலுள்ள காணிகளில் அப்படிக்கொத்த வேலைகளின் இடத்திலிருந்து அகற்றப்படவேண்டிய மண்ணை குப்பையை அல்லது சாமான்களை வீசுவது நீதியாகும், ஆனால் அப்படிக்கொத்த மண் குப்பை சாமான் ஓர் நியாயமான காலத்துக்குள் அகற்றப்படவேண்டும்.

4. அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பெற்ற எவரும் இருக்கும் அல்லது திறக்க நினைக்கப்பட்ட தெருவின் சமீபத்திலுள்ள நிலங்களுக்கூடாக அத்துடன் யாதொரு வகையில்சேர்ந்த வேலைநடத்துங் காலத்தில் ஒரு வேளைக்குரிய ரோட்டைத்திறக்க நீதியாகும். ஆனால் கட்டிடங்களுள்ள அல்லது அடைக்கப்பட்ட தோட்டங்கள் அல்லது முற்றங்களின் நிலத்துக்குமேலாக அவ்ரோட்டுகள் போகப்படாது.

5. அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரங் கொடுக்கப்பட்டவர் பிரசித்த ரோட்டுகளில் வழரும் மரங்கள் பத்தைகள், பூண்டுகள் அல்லது ரோட்டின் மேலாக வளரும் தடையாயிருக்கும் அல்லது இடஞ்சல்பண்ணும் மரங்களின் இலைகள், கொப்புகள், வேர்களை வெட்டி அடுத்த காணிகளிற் போடவும் அதற்காக அம்மரங்கள், பத்தைகள், செடிகள், இலைகள், கொப்புகள் அல்லது வேர்களை அகற்றுவதற்கு வேண்டிய ஆட்கள், மிருகங்கள், ஆயுதங்களுடன் எதொரு காணிகள் தோட்டங்களில் உட்செல்ல நீதியாகும்.

6. அக்கிராசனரால் அதிகாரம்பெற்ற ஒருவர் அவசியமென்று கண்டால் எதொரு பக்கத்தில் வேலிகள், மதில்கள், அகள்கள், கான்கள், அணைகளைப்போடவும் நீதியாகும்.

7. அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரம்பெற்றவர் சகல தெரு கான்களையும் வாய்க்கால்களையும் உண்டாக்கத் துப்பரவுபண்ணவும் யாதொரு தெருக்களை வாய்க்கால்களை பகுத்திரம்பண்ணி திருத்திப் பழுபார்த்து அல்லது உண்டாக்குவதற்கு அவசியமெனக் கண்டால் அவ்ரோட்டுகள் வாய்க்கால்களுள்ள நிலங்களில் அல்லது சமீபத்திலுள்ள நிலங்களில் பாலங்கள்போடவும் நீதியாகும்.

8. அக்கிராசனரால் எழுத்திலே விசேஷமாய் நியமிக்கப்பட்ட சங்கத்தின் உத்தியோகஸ்தன் யாதொரு தெருவில் அத்தெரு பழுதுபார்க்கப்படும்பொழுது அல்லது பழுதுபார்க்கத் தொடங்குமுன் அல்லது பழுதுபார்த்து முடித்தபின் அப்பழுதுபார்ப்பின் வசதிக்கு அல்லது புதிதாய் பழுதுபார்க்கப்பட்ட ரோட்டுகளுக்குச் சேதம்வராமல் தடைசெய்வதற்கு வேண்டியதான காலத்தில் வேண்டிய யாதொரு பதார்த்தம் பொருள் எதொன்றையும் அத்தெருவில் வைக்க அல்லது இருக்கவிடவும் அதிகாரமுண்டு.

9. மேற்குறித்தபடி நியமிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் காலமே 7 மணிக்கும் சாயந்தரம் 5 மணிக்குமிடையில் அவரால் வைக்கப்பட்ட அல்லது அவருக்குக்கீள்வேலைசெய்ய நியமிக்கப்பட்ட வேலைக்காறர் தொழிலாளர் கூலிக்காறருடனும் வேண்டிய கரத்தைகள் மிருகங்கள் மற்றும் வளிவகையுடனும் இருக்கும் அல்லது திறக்கயிருக்கும் தெருவை அடையாளம்பண்ண, அளக்க, உண்டாக்க, வேலைசெய்ய, திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்பரவுபண்ண, திருத்த, அல்லது வேலி அடைக்கவும் அல்லது அடையாளம்பண்ணுவதற்கு, அளப்பதற்கு, உண்டாக்குவதற்கு, வேலைசெய்வதற்கு, திறப்பதற்கு, மாற்றுவதற்கு, திருப்புவதற்கு, புதிப்பிப்பதறகு, துப்பரவுசெய்வதற்கு, திருத்துவதற்கு, அல்லது வேலியடைப்பதற்கு, அல்லது துணைசெய்வதில் அல்லது யாதொரு பாலம், வேலி, கான், வரம்பு, அல்லது அகள் கட்டவும், கிண்டவும், அல்லது அத்தெருவுடன்சேர்ந்த யாதொரு வேலையில் ஏற்பட்டிருக்கும் சங்கத்தின் யாதொரு உத்தியோகஸ்தன் அல்லது அவன் கீழ்வேலைசெய்யும் தொளிலாளர் கரத்தைகள் ஆட்கள் அல்லது பொருள்கள் பாவிப்புக்காக அத்தெருவில் அல்லது அதற்குச் சமீபத்தில் வேண்டியதாயிருக்கும் யாதொரு கட்டிடங்களை அல்லது கூலிவீடுகளை பழுதுபார்ப்பதற்காக வேண்டியதான மரம் கொப்புகள், கற்கள், மக்கிமண் அல்லது வேறு சாமான்களை அத்தெருவுக்குக்கிட்ட அல்லது அணித்தாயிருக்கும் எதொரு காணியிலிருந்து தேட கிண்டி எடுக்கவும் எல்லைகடந்து போவதாக எண்ணப்படாமல் யாதொருவருடைய நிலத்துக்கூடாக அவற்றைக்கொண்டுபோகவும் நீதியாகும். ஆனால் அப்படியான சாமான்கள் அயலிலுள்ள பாள்நிலங்களில் அல்லது பொதுவான களிவுத்தறைகளிலிருந்து வசதியாக வேண்டிய சாமான்கள் பெற்றுக்கொள்ளக்கூடுமானால் மேலேசொல்லியபடி அதிகாரம்பெற்றவர் அப்படிப்பட்ட சாமான்களை வசதியாய்ச் சேர்த்துக்கொள்ளலாம். அல்லாவிட்டால் முத்தம், வீட்டுவாசல், மைதானம், தோட்டம், பயிர்ச்செய்கைத் தறை, வயல் சோலைகளில் அல்லது அவைகளிலிருந்து சொந்தக்காறனின் சம்மதமில்லாமல் அப்படியான சாமான்கள் கிண்ட, வெட்ட, அல்லது எடுத்துக்கொண்டுபோகப்படாது. அப்படி எடுக்கப்படுஞ் சாமான்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொண்டு போவதினுலுண்டாகுஞ் சேதத்துக்கு நியாயமான பிரதி உபகாரம் அவற்றிற்காக செய்யப்படும். ஆனால் அப்படியான சாமான்கள் எடுக்கப்பட்ட கற்குளிகள் கிடங்குகளை யாதொரு ஆள் அல்லது மிருகத்துக்கு மோசம் வருவியாதபடி கிரு திபோட்டு அல்லது வேலியடைத்துச் சொந்தக்காறன் வைத்திருக்கவேண்டியது.

10. அக்கிராசனரால் எழுத்தில் அதிகாரங் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தன் யாதொரு தெருவைப் பாதுகாக்க அல்லது பகுத்திரப்படுத்தும்பொருட்டு தேள்வையெனக் கண்டால் அத்தெரு ரோட்டு அல்லது போடநினைத்திருக்கும் தெரு அல்லது ரோட்டுக்கு அருகாய் அல்லது சமீபத்திலுள்ள யாதொரு நிலம் அல்லது தோட்டங்களில் அல்லது அவைகளுக் கூடாக இருக்கும் சகல அகல்கள் சலதாரைகள் கான்கள் அல்லது நீர்வாய்க்கால்களை உண்டுபண்ண செருக்க துப்புரவுபண்ண திறந்துவைக்க அல்லது வேண்டியதான மரக்குத்திகளை குளல்களை வைக்கவும் மதவுகள் அல்லது பாலங்களை உண்டாக்கவும் அதிகாரமுண்டு.

11. அக்கிராசனர் தேள்வையென்று கண்டால் குடியிருக்கும் வீட்டை அடுத்திருக்கும் முற்றம் அல்லது நிலத்தின் சொந்தக்காறனை அல்லது யாதொரு ஒழுங்கையின் சொந்தக்காறனை அந்த முற்றம் நிலம் அல்லது ஒழுங்கையை அக்கிராசனர் கட்டளைபண்ணும் விதம் கல்பதிக்கவும் அம்முற்றம் நிலம் அல்லது ஒழுங்கைக்குக் கான் வைப்பதற்காகச் சமீபத்திலுள்ள பட்டணம் சாயகால் அல்லது கானுக்கு போதிய வடிகால் அல்லது குளாய்களை வைக்கும்படி நொத்தீஸ் மூலமாய் கேட்கவும் நீதியாகும். அப்படிக்கொத்த கான்கள் அல்லது குளாய்கள் அக்கிராசனர் குறிக்கிற சாமான்களாலும் பருப்பத்திலும் அவர் சொல்லும் மட்டத்திற்கும் செங்குத்தாயும் சொல்லப்பட்ட சாய்கால் அல்லது கானுடன் அவர் சொல்லுகிற சந்திப்பின் குறியிடத்துக்குக் கொண்டுபோக வேண்டியது. ஆனால் அவனை வைக்கும்படியாய் கேட்

கப்பட்ட கான்கள் அல்லது குளாய்களுக்கு தேள்வையான சாமான்களை அச்சொந்தக்காறன் கேள்விக்குக் கொள்விலைப்படி சங்கத்தார் கொடுக்கவேண்டியது. குறிக்கப்பட்ட காலத்துக்குள் நொத்தீசால் தேள்வைப்பட்டபடி நிறைவேற்றச் சொந்தக்காறன் தவறினால், அக்கிராசனரும் அவரால் அதிகாரங் கொடுக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது தொளில்காறர் அவ்விடத்தில் உட்சென்று செய்யவேண்டிய வேலையைச் செய்விக்கலாம். அதன் செலவு சொந்தக்காறன் கொடுக்கவேண்டியது.

## அத்தியாயம் III. 9 E (2) (*d*).

### பொதுச்சந்தையை ஸ்தாபித்தலும் ஒழுங்கும்.

1. ஒரு பொதுச்சந்தையை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானிக்கும்பொழுது சங்கத்தார் சந்தையை திறப்பதற்கான நேரத்தைப்பற்றி பத்து நாளைக்குக் குறையாத அறிவித்தலை கொடுப்பார். அந்த அறிவித்தல் பறையடிப்பித்துப் பிரசித்தம் பண்ண வேண்டியது.

2. அப்பொதுவான சந்தையை ஸ்தாபித்துத் திறந்தபின் யாதொருவரும் சங்கத்தினால் கொடுக்கப்படும் உத்தரவின்றி பொதுவான சந்தையிலொழிய சங்கத்தின் எல்கைக்குட்பட்ட வேறு எந்த இடத்திலாவது இறைச்சி வீட்டுப் பறவை மீன் கனி அல்லது காய்கறிகளை விற்பனவுக்குப் பிரசித்தமாய் வைக்கக்கூடாது. இந்த உபவிதியின் கொள்கைக்கு மாறாக விற்கவைத்திருக்கும் அல்லது விற்க கொண்டுதிரியும் யாதொரு இறைச்சி வீட்டுப்பறவை அல்லது காய் கனிகளை சங்கத்தின் அதிகாரி பிடித்து அக்கிராசனர் அல்லது பொலீஸ் நீதவான் அல்லது கிராமக்கோட்டு நீதவானின் கட்டளைப்படி அதை விற்பதற்குச் சங்கத்தின் கந்தோருக்கு அவற்றைக் கொண்டுபோகவும் நீதியாகும்.

3. கடைசியாய் சொல்லிய உபவிதியிற் காட்டப்பட்ட சகல உத்தரவுச்சீட்டுகளு மித்துடன் அணைக்கப்பட்டிருக்கும் A என்ற அட்சரமுள்ள அட்டவணையிலுள்ள மாதிரியிலும் அதில் சொல்லப்பட்ட காலத்துக்கும் அதற்கு மேற்படாமலும் சக்தியுடையதாயிருக்கும். அந்தக்காலம் ஒரு மாசத்துக் குட்படாமலும் பன்னிரெண்டு மாசத்துக்கு மேற்படாமலும் இருக்கும். அப்படிகொத்த உத்தரவுச்சீட்டுகள் மாசம் ஒன்றுக்கு 50 சதத்துக்கு மேற்படாத வீதத்தில் முற்பணமாகக் கொடுக்கவேண்டியது. ஆனால் சங்கத்தார் அவ்வுத்தரவுச் சீட்டுகளை எக்காலத்திலாவது அழிக்கத் தத்துவமுடையவராயிருப்பார்.

4. ஒவ்வொரு சந்தையிலும் அறவிடவேண்டிய வாடகை சுங்கம சலார்களின் அட்டவணை இங்கிலீஸ் சிங்களம் தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு சந்தையின் வெளியரங்கமான விடத்தில் வைக்கப்படும். அப்படி நொத்திசினால் குறிக்கப்பட்டதிலும்பார்க்க மேலதிகமான தொகையை யாதொருவர் கேட்கவும் ஏற்கவும் நீதியில்லை.

5. பொதுவான சந்தையின்பேரில் கொடுக்குமதியான சகல வாட்கைப்பணம் சுங்கம சலாரும் காலத்துக்குக்காலம் சங்கத்தாருக்கு அல்லது அவர்களின் குத்தகைகாறருக்கு அல்லது சங்கத்தாரால் அறவிடுதற்கு நியமனம்பெற்ற ஆள் அல்லது அவரின் குத்தகைகாறனுக்கு கேட்டநேரமே கொடுக்கவேண்டியது.

6. மேற்சொல்லிய பிரகாரம் யாதொரு வாடகை சுங்கம அல்லது சலாரை இறுக்கவேண்டியதான ஆட்கள் கேட்டநேரமே கொடுக்காவிடில் சங்கம் அல்லது அதை அறவிடுதற்காய் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர் அவ்வாடகை சுங்கம் அல்லது சலாரை இறுக்கவேண்டியவருக்கு உடையதாய் அல்லது அவருடைய ஆட்சியில் அவர் பொறுப்பிலே சந்தையிலிருக்கும் சகல அல்லது யாதொரு சாமான்களை தடங்கல்பண்ணி அல்லது விற்று அவற்றை அறவிடலாம்.

7. உத்தரவுச்சீட் டில்லாமல் யாதொருவரும் பொதுச் சந்தையில் ஒரு கடையைப் பிடிக்க அல்லது ஆட்சிபண்ணக் கூடாது. அந்த உத்தரவுச்சீட்டுகள் இத்துடன் அணைக்கப்படும் B என்ற அட்சரங்கொண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட மாதிரியாயிருக்கும். அப்படிக்கொத்த உத்தரவுச்சீட்டின் நொத்தீசுகளில் ஏதொன்றை அவன் மீறப்படாது. சந்தையிலே ஒட்டப்பட்ட நொத்தீசினால் வைத்திருக்க அல்லது விற்கச் சங்கத்தாரால் தடைசெய்யப்பட்ட யாதொரு சாமானை யாதொருவனும் எந்தக் கடையிலும் வைத்திருக்க அல்லது விற்பனவுக்கு வெளிவைக்கப்படாது.

8. மீன்சந்தையில் அல்லது மீன்கடையில் மீனைத்தவிர வேறுபண்டங்களை விற்க அல்லது விற்பனவுக்கு வெளிவைத்திருக்கப்படாது. ஏலத்தில் நடத்தப்படும் சகல மீன்விற்பனவுகள் சங்கத்தாரால் அதற்கென்று பிறம்பாய்க் கட்டப்பட்ட சாலையில் நடத்தப்படும். அங்கே விற்கப்படும் சகல மீனிலும் ஒரு வாடகை அறவிடப்படும். வேறிடத்தில் விற்பனவு சங்கத்தின் விசேஷ உத்தரவைக்கொண் டொளிய மற்றப்படி தடைசெய்யப்படுகிறது.

9. காய்கறி அல்லது கனிகள் விற்குஞ் சந்தையில் யாதொருவரும் இறைச்சியை மீனை புதிதாயிருந்தாலும் உப்பிட்டதாயினும் அல்லது புதுக்கனிகள் அல்லது காய்கறிகளைத்தவிர ஏதுஞ் சமைக்கப்பட்ட தீனை அல்லது ஏதுஞ் சாமான்களை விற்க அல்லது விற்பனவுக்கு வைக்கக்கூடாது.

10. ஒரு கடயை ஆட்சிபண்ணுவோன் சந்தையின் ஏதொரு பகுதியையும் எவ்வகையாவது அடைக்கக்கூடாது. அல்லது மேறகட்டி அல்லது மறைப்புப்போடக்கூடாது அல்லது அக்கிராசனரின் உத்தரவின்றி சாயந்திரம் 7 மணிக்கும் காலமே 6 மணிக்குமிடையில் சந்தையிலே யாதொரு சாமானையும் விடக்கூடாது.

11. சந்தையில் யாதொரு கடை அல்லது ஆசனத்திலிருப்பவன் கடை அல்லது ஆசனத்தை அழுக்கு அல்லது குப்பையில்லாமல் சுத்தமாய் வைத்திருக்கவேண்டியது. தோல்புரவையில் தொற்றுதலான அல்லது பற்றுதலத்மையுள்ள வியாதியுள்ள ஒருவரும் ஒரு பொதுவான சந்தையின் யாதொரு கடையில் ஆசனத்தில் அல்லது இடத்தில் இருக்க என்ன விதமான பண்டத்தை வைத்திருக்கவும் விற்பனவுக்கு வைக்கவும்படாது.

12. பொதுவான சந்தையிலிருக்கும் அல்லது அதைப்பாவிக்கும் யாதொருவனும்—

(*a*) அச்சந்தையின் அல்லது அவடத்தில் ஒழுங்கீனமான விதமாய் நடக்கவும்படாது அல்லது பீடை அல்லது துன்பத்தையுஞ் செய்யக்கூடாது.

(*b*) அச்சந்தையில் சமையல் வைக்கப்படாது.

(*c*) சாயந்தரம் 9 மணிக்குச் சந்தைநேரம் முடிந்தபின் ஒருவன் போதிய நியாயமின்றி அங்கே தங்கத் தாமதிக்கக் கூடாது.

(*d*) சங்கத்தின் கட்டிடங்கள் கடைகள் விளக்குகள் அல்லது சந்தையிலுள்ள ஏதொரு பொருளை எப்படியாயினும் அழுக்குப்பண்ண அல்லது சேதம்பண்ணலாகாது. அல்லது அப்படியான சந்தைப்பாவிப்புக்காக வைக்கப்பட்ட தண்ணீரை எவ்வகையாயினும் அசுசிப்படுத்த அல்லது கெடுக்கவும்படாது.

13. சங்கத்தின் காரியகாறன் அச்சங்கத்தின் எல்கைக்குள்பட்ட இடத்தில் கொண்டுவரப்பட்ட அல்லது விற்பனவுக்கு வைக்கப்பட்ட மனுஷீக போசனத்துக்குத்தகாத யாதொரு இறைச்சி வீட்டுப்பறவை மீன் வேட்டையாடிய மிருகம மாமிசம் காய்கனி பழவர்க்கம் அல்லது வேறு சாப்பாட்டுக்குரிய பொருள்களைப்பிடித்து அவட்டத்திலுள்ள வைத்திய உத்தியோகஸ்தனிடத்துக்கு அல்லது அவரில்லாவிடில் அல்லது அவரிடத்திலப்படி உத்தியோகஸ்தனில்லாவிடில் பொலிஸ் நீதவானிடத்தில் அல்லது பொலிஸ் கோட்டில்லாவிடில் கிராமக்கோட்டுத் தலைவனிடத்துக்குக் கொண்டுபோக நீதியாகும். அப்படிக்கொத்த வைத்திய உத்தியோகஸ்தர் பொலிஸ் நீதவான் கிராமக்கோட்டுத்தலைவன் அந்த இறைச்சி வீட்டுப்பறவை மீன் காய்கறிகள் பழங்கள் அல்லது வேறெந்தப்பண்டங்களும் மனுஷீக போசனத்துக்குத் தகாதெனக்கண்டால் அவர் அதை அழித்துப்போட அல்லது அதை விற்காதபடி அல்லது சாப்பாட்டுக்குப் பாவியாதபடி அழித்துப்போட கட்டளைசெய்வார்.

14. பொதுவான சந்தைகளெல்லாம் நாளாந்தம் காலமே 6 மணி துவக்கம் பின்பகல் 9 மணிவரைக்கும் திறக்கப்பட்டிருக்கும், சந்தையில் சரியான வெளிச்சம் வைப்பதற்கு ஒழுங்குபண்ணுவது சங்கத்தாரின் கடமையாகும்.

15. சந்தை எல்கைக்குள் ஒழுக்கத்தை நிலைப்படுத்துவது சந்தையின் குத்தகைகாறன் அல்லது காவற்காறனின் கடமையாகும். ஒரு பொதுவான சந்தையில் அதிகாரஞ்செய்ய அல்லது வாடகை சுங்கம் அல்லது சந்தைவரியை அறவிட அல்லது அங்கே ஒழுக்கத்தையும் சுத்தத்தையும் அனுஷ்டிக்கச்செய்யச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒருவரை அவர் தன் கடமையிலிருக்கும்பொழுது தடைசெய்யும் அல்லது எதிர்க்கும் ஒவ்வொருவரும் குற்றத்துக்குள்ளாவார்.

16. சனங்களால் யாதொரு விதமான மீன் தின்பது அல்லது பாவிப்பது தீங்கு அல்லது கொள்ளைநோய் பரம்புங் காலத்தில் யாதொரு விதமான பழங்கள் காய்கறிகள் தீங்குள்ளதென்ச் சங்கத்தார் கண்டால், வைத்திய உத்தியோகஸ்தரின் சிலாக்கியத்துடன் பறையடிப்பித்து அல்லது வேறு போதிய அறிவித்தலினால் சங்கத்தாருக்கு அவசியமென்று காணப் படும் காலத்துக்கு அந்த மீன் பழம் காய்கறிகளை சங்கத்தின் எல்லைகளுக்குள் சந்தையில் அல்லது வேறிடங்களில் மீன் பழங்கள் அல்லது காய்கறிகளின் விற்பனவைத் தடைசெய்யலாம். அப்படியான அறிவித்தல் கொடுத்தபின் விற்பன வுககு வைத்தாலும் அல்லாவிடினும் சங்கத்தார் அல்லது அக்கிராசனரின் கட்டளைப்படி பிடித்து அழித்துப்போட சங்கத் தாருக்கு நீதியாகும்.

17. உத்தரவுபெற்ற மாட்டடிகாறன் பிரசித்த சந்தையில் அல்லது அவனால் வாடைகொடுக்கப்பட்ட கடையி லன்றி யாதொரு இறைச்சியை அல்லது கொல்லப்பட்ட மிருகத்தின் பாகத்தை விற்க அல்லது விற்பனவுக்கு வைத் திருக்கக் கூடாது.

18. யாதொரு கரத்தை அல்லது வண்டி ஏற்றுமதி அல்லது இறக்குமதிபண்ணவேண்டிய நேரத்திலொழிய சந்தையு மதற்குரிய விடத்திலும் நிற்கப்படாது.

19. பொதுவான சந்தையின் கடயை வாடைக்கெடுத்திருக்கும் ஒவ்வொருவரும் கடை அல்லது சமீபத்தில் குப்பை கஞ்சல்போட ஒரு பாத்திரம் வைத்திருக்கவேண்டியது.

20. யாதொருவனும் அதற்கென்று வைக்கப்பட்ட பாத்திரத்துக்குள்ளன்றி ஒரு பொதுவான சந்தையில் அல்லது அதற்குச்சேர்ந்த இடங்களில் யாதொரு குப்பை கஞ்சல் எலும்பு மிருகத்தின் தோல் அல்லது வேறொன்றையும் வீசப் படாது.

21. இதன்கீழ் சொல்லியபடி அன்றி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட பிரசித்த மாடடிக்கும் வீட்டில் கொல்லப் படாத யாதொரு மிருகத்தின் பிணத்தை அல்லது ஏதொரு பகுதியைப் பொதுவான அல்லது பொதுவாகாத சந்தையில் அல்லது அப்படி விசேஷமாய் உத்தரவுசெய்யப்பட்ட இடத்தில் விற்க அல்லது விற்பனவுக்கு வைக்கக்கூடாது. இவ்வுபபிரமாணத்தின் கொள்கை இத்தேசத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிறதேச இறைச்சி வேட்டையாடிய மிரு கம் மீனுக்கு வழங்காது.

22. ஒரு பொதுச்சந்தையின் ஒரு கடையை வைத்திருக்க அதில் இருக்க உத்தரவுபெற்றிருக்கும் ஒருவர் தொ டர்ச்சியான இரண்டு நாளைக்குப் போதியளவு நியாயமில்லாமல் வேணுமென்று அதைப்பாவியாமலும் அல்லது அவர் ஊரவர்களின் தேவைக்கு அசட்டைபண்ணி அல்லத்தட்டினால் அப்படிக்கொந்த உத்தரவுச்சீட்டை அழிக்க அல்லது நிறுத்த அக்கிராசனருக்கு நீதியாகும்.

23. அப்பப் போறணைகள், ஒவ்வொரு அப்பப் போறணையும் காற்றுச் செல்லக்கூடியதாயும் நன்றாய் வெளிச்ச மிடப்பட்டதாயும் அவற்றின் சுவர் சுண்ணம்புச் சாந்து பூசப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டுந் தளம் சீமேந்திடப்பட்டும் கான்கள் போதியளவு வைக்கப்பட்டு மிருக்கவேண்டும்.

24. யாதொரு அப்பப்போறணை ஏதொரு கக்கூசு அல்லது மலசலம் வீடு அல்லது வெளியூரான சாய்காலிலிருந்து 30 அடி தூரத்துக்குள்ளிதாக அல்லது அவைகளிலிருந்து வரும் கெட்ட நாற்றங்கள் சேரக்கூடிய பக்குவத்தி லிருக்கப் படாது.

25. அப்பப்போறணையாகப் பாவிக்கப்படு மிடங்கள் குடியிருக்கு மிடமாக அல்லது வேறு யாதொரு முகாந்தரத் துக்கும் பாவிக்கப்படாது.

26. அப்பப்போறணைக்குச் சேர்ந்த அல்லது பாவிக்கப்படும் சகல கருவிகளும் தளபாடங்களும் சுத்தமாயிருக்க வேண்டும்.

27. அப்பத்துக்காகப் பாவிக்கப்படும் மா தண்ணீர் மற்றும் யாதார்த்தங்கள் நல்லதாயும் சவுக்கியத்துக்கு ஏற்ற தாயு மிருக்கவேண்டும். சங்கத்தாரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட எவரும் காலத்துக்குக்காலம் அவற்றின் மாதிரிசாமான் கேட்டு வாங்க நீதியுண்டு. அப்பஞ் சுடுகிறவர்கள் சகலரும் அப்பத்தின் நிறையைக்காட்டும் முத்திரை அல்லது அச்சுப் பதிக்க வேண்டியது. அப்படி முத்திரையில்லா அப்பங்களை விற்பவர் குற்றத்துக்குள்ளாவார்.

28. அப்பப்போறணைக்குக் கிட்டவிருக்கும் குப்பை அழுக்குகள் சுணக்கமின்றி அகற்றவேண்டும். கான்கள் நன் றாய் புதிப்பித்திருக்க வேண்டும்.

29. யாதொரு தோல்நோய் தொற்றுநோய் பற்றுநோ யுள்ளவர் அல்லது அப்படிப்பட்ட துன்பமுடையவரை புதிதாய் பராமரித்தவர் அல்லது வேறுவிதமாய் அசுத்தமுள்ளவரை அப்பப்போறணையில் வேலைக்குவைக்கக்கூடாது.

30. சுகசங்கத்தி னதிகாரி அல்லது அக்கிராசனரால் எழுத்தி லதிகாரங் கொடுக்கப்பட்ட ஒருவர் அந்தக்காலத்தி லும் ஒரு அப்பப் போறணையை உட்சென்று சோதனைபண்ண நீதியாகும். ஆனால் அவடத்தில் யாருமொருவர் சமுகமா யிருக்கவேண்டும்.

31. சோத்துக்கடைகள் தேயிலை கோப்பிக்கடைகளும் பால்சாலைகளும்.—சகல சோத்துக்கடை தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளும் அக்கிராசனருடைய திறுத்திக்குச் சுத்தமாயும் சவுக்கியமாயும் வைத்திருக்க வேண்டியது.

32. குளிகுமிடங்கள்.—சங்கத்தார் மாடுகள் குழிப்பாட்டவும் துணிகள் தோய்க்கவும் தக்கதாய்க் காணப்படு மிடத்தை காலத்துக்குக் காலம் தீர்மானத்தினால் நிச்சயிக்கவும் அவைகள் பாவிக்கப்படும் நேரத்தைக் குறிக்கவும் நீதி யாகும்.

33. அப்படிப் புறம்பாக வகுக்கப்பட்ட இடங்களின் இடாப்பு இங்கிலீஸ் சிங்களம் தமிழில் அரசாட்சியின் "கெசற்" பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பட்டு சங்கத்தின் எல்லைக்குள் பறையடிப்பித்து பிரசுரம்பண்ணி சொல்லப்பட்ட மூன்று பாஷை டாப்பின் பிரதிகளைச் சங்கத்தின் கந்தோரில் ஒட்டிவைக்க வேண்டியது.

34. குதிரைகள் மாடுகள் சீலைகள் அல்லது பாய்களை அம்முகாந்தரத்துக்காக சங்கத்தாரால் நியமித்து விடப்பட்ட விடங்களைத்தவிர நகரத்துக்குள் எந்தப் பொதுவான இடத்திலும் யாரும் குழிப்பாட்ட அல்லது கழுவக்கூடாது.

35. குழிப்பாட்டக் கழுவுவதற்காக விடப்பட்டதான மேலே குறிக்கப்பட்ட எந்த இடங்களிலும் யாதொரு தோல் நோய் தொற்றுநோய் பற்றுநோய் உள்ள எவரும் உடைகளை அல்லது வேறு சாமான்களைக் கழுவப்படாது.

### அத்தியாயம் IV. பிரிவு 9 E (2) (1).

### பாள்நிலம் அல்லது பொதுவான நிலங்களின் பாதுகாப்பு.

1. அக்கிராசனருடைய அதிகாரமின்றி ஒருவரும் பாளான அல்லது பொதுவான நிலங்களிலிருந்து யாதொரு மணல், மண், கல் வழரும் பயிர் அல்லது மரங்களை அகற்ற அல்லது அந்நிலங்களின்மேல் பரப்பை எவ்வகையாவது மாற்ற அல்லது வேறுபடுத்தவும் படாது.

2. அக்கிராசனருடைய உத்தரவின்றி சங்கத்தில் விடப்பட்ட பொதுவான நிலங்களில் யாதொரு குதிரை, மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி கட்ட அல்லது மேய விடக்கூடாது. அப்படியான உத்தரவு அக்கிராசனரால் அவர் பிறியப்படி ஒரு வருடத்துக்கு அல்லது எதுங் குறைந்த பகுதிக்கு கொடுக்கப்பட்டு சங்கத்தார் காலத்துக்காலம் இரகிக் குஞ் சலாருக்கு அமையும்.

3. அக்கிராசனரால் எழுத்தி லதிகாரம் கொடுக்கப்பட்ட எவரும் நகரத்துக்குள் பொதுவான நிலத்தில் மேல் சுட் டிய உத்தரவில்லாமல் கட்டப்பட்டிருக்கிற அல்லது மேயக் காணப்படும் யாதொரு குதிரை, செம்மரியாடு, வெள்ளாடு, அல்லது மற்றுமிருகத்தைப் பிடிக்கலாம். ஒரு ரூபாய் சலாரும் மாட்டுத் தொழுவத்தில் விடப்பட்டால் அங்கே நின்ற தற்கு அறவிடவேண்டிய சலாரும் கொடுத்தாலன்றி, அப்படிப் பிடிக்கப்பட்ட மிருகங்கள் விடுதலையாக்கப்படாது.

4. பத்து நாளைக்குள் சுகந்தைபண்ணாத பிடிக்கப்பட்ட ஏதொரு மிருகமும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படலாம்.

5. சங்கத்தார் தங்களுக்குத் தகுதியெனக் காணப்படும் கொந்தீசில் பன்னிரெண்டு மாசங்களுக்கு மேற்படாத காலத்துக்கு பொதுவான மேய்ச்சல் தரை அல்லது அதன் ஒருபகுதியை வாரத்துக்கு அல்லது குத்தகையாய்க் கொடுக்கலாம்.

### அத்தியாயம் V. பிரிவு 9 E (2) (f).

எல்கைபோட்டுக் காப்பாற்றுவது.

1. நகரத்துக்குள் யாதொரு வீடு தோட்டம் கட்டிடம் அல்லது காணியுடையவர் அல்லது அதில் குடியிருப்பவர் அந்த வீடு தோட்டம் கட்டிடம் அல்லது காணியை தரைமட்டத்திலிருந்து நாலடி உயரத்துக்குப் பதியாத சிவர் அல்லது நல்ல வேலியால் சூளப்பட்டதாய் வைத்திருக்க வேண்டும்.

2. யாதொரு பொதுவான கட்டப்பட்ட கானுக்கு மூன்றடிக்கு யாதொரு உய் வேலி இனிமேல் நாட்டப்படாது.

### அத்தியாயம் VI. பிரிவு 9 E (2) (k).

பொதுவான குழிக்கு மிடங்கள்.

1. சுக சங்கத்தார் காலத்துக்குக்காலம் தீர்மானத்தினுல் தக்கதாகக் காணப்படும் பொதுவான குழிக்குமிடங்களை வகுத்துவிடவும் அவைகள் பாவிக்கப்படும் நேரங்களைக் குறிக்கவும் நீதியாகும்.

2. யாதொருவருங் குழிப்பதற்காக நகரத்தில் வேறொரு பொதுவான இடத்துக்குப்போகவும்படாது, அதெற்கென்று விடப்பட்ட இடங்களில் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட நேரங்கள் தப்பி குழிக்கவும்படாது.

3. பொதுவான குழிக்குமிடங்களாக விடப்பட்ட இடங்களின் ஒரு டாப்பு இங்கிலிஸ் சிங்களம் தமிழில் அரசாட்சி "கெசெற்" பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பட்டு சங்கத்தின் எல்கைக்குள் பறையடிப்பித்துப் பிரசித்தப்படுத்தவும்படும்.

4. சனங்கள் குழிப்பதற்காக செலவுகொடுத்துப் பாவிக்கும் ஒவ்வொரு கிணறும் மூன்றடிக்குப் பதியாத சிவர் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். அச்சிவருக்கு வெளிப்புறம் நிலத்தின் மேல்பரப்புக்குக் கீழ் இரண்டடித் தாள்வுக்கு சீமேந்தி போடப்பட்டிருக்க வேண்டியது.

5. அப்படியான ஒவ்வொரு கிணற்றையும் அடுத்துச் சுற்றியிருக்கும் நிலம் சரியான வாய்க்காலுக்குப் போகின்ற ஒரு கட்டப்பட்ட கானுக்கு தண்ணீர் ஓடத்தக்கதான சரிவுள்ளதாய் யிருத்தல் வேண்டும்.

6. அப்படியான கிணற்றில் அல்லது அதற்குச் சமீபத்தில் உடுப்பு பாய் அல்லது வேறேதொன்றுங் கழுவ நீதியல்ல.

7. குழிப்பதற்காக அக்கிணறுகளில் பாவிக்கப்படும் வாழிகள் குறைந்தகணக்கில் வருடம் ஒருமுறை மைபூசப்பட்டு நாளாந்தம் சுத்தப்படுத்த வேண்டியது.

8. தோல்நோய் தொற்றுநோய் பற்றுநோயுள்ள யாதொருவரும் மேற்சொல்லிய ஒழுங்குகளின்படி குழிப்பதற்காக விடப்பட்ட யாதொரு இடத்திலுங் குழிக்கப்படாது. யாதொருவரும் தன்னுடைய அல்லது தன் பராபரிப்பிலிருக்கும் யாதொரு மிருகத்தையும் அப்படிக்கொத்த இடங்களில் போக நிற்க அல்லது தண்ணீர் குடிக்க விடப்படாது.

### அத்தியாயம் VII. பிரிவு 9 E (2) (m), (n).

மாட்டுத் தொழுவங்களின் சலார்.

1. நகரத்தின் பிரசித்த ரேட்டுகளில் அல்லது பாதைகளில் திரியும் சகல மாடுகள், செம்மரி வெள்ளாடுகள் பிடிக்கப்படும்பொழுது சங்கத்தாரால் அதற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட தொழுவங்களில் விடப்படும். அப்படியாக விட்ப்பட்ட ஒவ்வொரு மிருகத்தையும் மீட்டுக்கொண்டு போவதற்கு பின்வருமாறு செலவு கொடுக்கவேண்டியது :—

பிடிப்பதற்கு ஒவ்வொன்றிக்கு ரூபாய் 1.

தொழுவத்தி லிருப்பதற்கு ஒரு நாள் அல்லது ஒரு நாளின் பகுதிக்கு ஒவ்வொன்றிற்குச் சதம் 25.

தீன்கொடுத்தால் ஒரு நாள் அல்லது ஒரு நாளின் பகுதிக்கு ஒவ்வொன்றிக்குச் சதம் 15.

2. பிடிக்கப்பட்ட பத்து நாட்களுள் சோந்தை சொல்லப்படாத எந்த மிருகமும் பிரசித்த எலத்தில் விற்கப்படும். சலாரும் செலவும் விற்பனவுத் தொகையிலிருந்து அறவிடப்படும்.

### அத்தியாயம் VIII. பிரிவு 9 E (2) (o).

1. யாதொருவரும் அக்கிராசனருக் கெழுத்திலே பதினாலு நாளைக்குமுன் அறிவித்தல் கொடாமல் ஏதொரு நிலையுள்ள அல்லது நிலையற்ற கட்டிடத்தைக கட்ட அல்லது திரும்பக்கட்ட அல்லது பழுதுபார்க்க அல்லது கூட்ட அல்லது பெருப்பிக்கவும் அப்படியான ஏதுமொரு கட்டிடத்தின் முகப்பைப் புதுப்பிக்க பழுதுபார்க்க அல்லது எவ்விதத்திலேனுங் கூட்ட அல்லது ஒரு கான் அல்லது மலசலக்கூடம் அல்லது ஊத்தைக்குளிக்குமேல் ஒரு கானை அல்லது பாலத்தை மேண்டயை அல்லது ஒரு கட்டைக்கட்ட நீதியாயிராது.

2. அககிராசனருக்கு எழுத்தில் முன்னறிவித்தல் கொடுத்து பதினாலு நாளைக்குப் பின்னும் பின்வருங் கொந்தீசுகளுக்கமையவுமன்றி குடியிருப்பதற்காக ஒரு வீடு அல்லது ஒரு கொட்டிலைக் கட்ட அல்லது அதைக் குடியிருக்க விடுவதும் நீதியாயிராது. எப்படியாயினுஞ் சிவர்கள் பன்னுங்கினுல் பட்டுப்படப்படாது, ஆனால் சரியாகச் சாந்துபூசி வெள்ளையடிக்கக்கூடியதான மண்வரிச்சு அல்லது வேறு இணககமான சாமான்களினுல் கட்டுப்படவேண்டியது.

மனிதர் குடியிருப்பதறகாய் பாவிக்கிற அப்படிக்கொத்த ஒவ்வொரு வீடு கொட்டில் அல்லது அறை 120 சதுர அடி மேல்விசாலத்துக்குக் குறையாமலும் 10 அடிக்குக் குறையாத உயரமும், தாள்வாரம் குறைந்தகணக்கில் நிலத்திலிருந்து 6 அடிக்குக் குறையாமலு மிருக்கவேண்டியது.

மனிதர் குடியிருப்பதற்கான ஒவ்வொரு அறைக்கும் 6 அடி நீளம் 3 அடி அகலத்துக்குக் குறையாத கதவு ஒன்றேனும் மூன்றடிநீளம் இரண்டடி அகலத்துக்குக் குறையாத ஒரு சன்னலேனு மிருக்கவேண்டும்.

தளம் நிலத்திலிருந்து ஒரு அடிக்குப் பதியாமலிருக்கவேண்டும். ஆனால் அக்கிராசனருக்கு நிலயத்துக்குத் தக்கதாய் உயர்ந்த அளவைக் கட்டளைசெய்ய இஷ்டமுண்டு.

இரண்டு நிரை அல்லது அடைவீடுகளுக் கிடையில் குறைந்தகணக்கில் 15 அடி குறையாத விசாலமிருக்கவேண்டும். இந்த உபபிரமாணத்தின் கொள்கைக்கு மாறுகக் கட்டப்பட்ட யாதொரு வீடு அல்லது கொட்டிலை சொந்தக்காறனுக்கு அதை மாற்ற அல்லது அகற்றிப்போடும்படி எழுத்தில் நொத்தீசு கொடுத்து ஒரு மாசத்துக்குள் அதைச் செய்யத்தவறினுல் அல்லது அசட்டைபண்ணினுல் சொந்தக்காறனுடைய செலவில்தானே அதைப் பிடுங்குவிக்க அக்கிராசனருக்கு நீதியாகும்.

### அத்தியாயம் IX. பிரிவு 9 E (2) (t).

துப்பரவுக்குப் பொதுப்பிரமாணங்கள்.

1. சுகசங்கத்தின் எல்கைக்குள்பட்ட இடங்களின் சகல சொந்தக்காறர் வாடை கொடுத்திருப்பவர் அல்லது குடியிருப்போர் அவற்றை சகல களைப்பூண்டுகள் பெருஞ்செடிகள் துர்கந்தமான பயிர்கள் மற்றுஞ் சகல குப்பைகூளங்களிலிருந்தும் துப்புரவாய் வைத்திருக்க வேண்டியது.

2. சங்கத்தின் உத்தரவில்லாமல் யாதொருவரும் நகரத்தின் எல்கைக்குள் கூலிக்கல்லது வாடகைக்குக் கொடுப்பதற்காக யாதொரு மாட்டுத்தொழுவ மல்லது மாடுதங்கு மிடத்தை வைத்திருக்க கூடாது. அக்கிராசனர் சனங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அவசியமெனக் கவனிக்கிற கொந்தீசுகளை அவ்வுத்தரவுச்சீட்டு அடக்கியிருக்கும் அப்படி

யான மாட்டுத்தொழுவம் அல்லது மாடுதங்குமிடத்தை உடையவர் அப்படியான கொந்தீசுகளைக் கவனிக்க கட்டுப்பாடுள்ளவர். இந்த உபபிரமாணத்தின் கீழ் கொடுபடும் எந்த உத்தரவுச்சீட்டும் செலவில்லாமல் கொடுபடும்.

3. ஒவ்வொரு குதிரைலாயம் மாட்டுத்தொழுவம் மாடுதங்குமிடம் அல்லது காலையுடையவர் அல்லது வாடகைக்காறன் அவற்றை ஓட்டினால் அல்லது இரும்புக் கூரையினால் மூடி செங்கல்லு அல்லது பொடிக்கல்லுச்சேர்ந்த சீமேந்து அல்லது கிசில் பதிப்பித்தும் அக்கிராசனர் கட்டளைபண்ணுகிற விதமாய் கட்டப்பட்ட ஒரு மூடப்பட்ட வக்கில் மூத்திரத்தையும் அழுக்கு நீரையுங் கொண்டுபோவதற்காக இணக்கமாய்த் தழுவிசை அல்லது சீமேந்திடப்பட்ட கான் அமைத்து வைத்திருக்க வேண்டியது. குறித்த வக்கிலுள்ள சாமான் சொந்தக்காறன் அல்லது வாடகைக்காறனுடைய செலவில் அகற்றி அதனால் யாதொரு துன்பமும் நேரிடாதபடி அகற்றிப்போட வேண்டியது.

அப்படியான ஒவ்வொரு லாயம் மாட்டுத்தொழுவம் மாடுதங்குமிடம் காலையும் ஒவ்வொரு நாளுங் கழுவிச் சுத்தமாக்கி குறைந்த கணக்கில் மூன்று மாசத்துக்கொருமுறை வெள்ளையடிக்கவேண்டும்.

சாணியும் எருவும் குறித்தலாயம் மாட்டுத்தொழுவம் தங்குமிடம் அல்லது காலையில் சொந்தக்காறன் அல்லது வாடகைக்காறனால் சங்கத்து வேலைக்காறரால் அகற்றப்படும்படியாக வெளிப்புறத்தில் ஒரு சரியான கொளகலத்தில் போடப்படவேண்டும்.

4. சுகசங்கத்தின் எல்லைக்குள் தோல் பதனிடுஞ்சாலை செங்கல் சுடுமிடம் சுண்ணாம்புச்சூளையாகப் பாவிக்கப்படுமிடங்களின் சொந்தக்காறன் அல்லது வேலைகொள்பவன் அல்லது வண்டில் நிறுத்துமிடம், மாடுவிடுமிடம், அப்பப்போறணை, தபால்வண்டி செய்யுமிடம், அல்லது கைத்தொழில் செய்யுமிடத்தில் வேலைகொள்பவர் சகல ஊத்தை அழுக்கு குப்பைகளை ஒவ்வொரு 24 மணித்தியாலத்துக்கு இரண்டுமுறை, அதாவது காலமே 6 மணிக்கும் 8 மணிக்கு மிடையிலும் சாயந்தரம் 4 மணிக்கும் 6 மணிக்குமிடையிலும் அகற்ற அல்லது அகற்றிவித்து அக்கிராசனர் உத்தரவுகொடுத்த விடங்களில் போடவேண்டியது.

5. ஒவ்வொரு வண்டில்விடுமிடமும் மாட்டுப்பட்டி ஆட்டுப்பட்டிகளும் அக்கிராசனரின் திருத்திக்கு தழுவிசை போட்டுக் கான்வைக்கவேண்டியது.

6. தங்களுடைய இடங்களிலிருந்து தூசி சாம்பல் குப்பை கஞ்சல் மறுகூளங்கள் சங்கத்தின் தெருக்கூட்டிகளால் அகற்றப்பட வேண்டுமென்று விரும்புகிற சகல வீட்டுக்காறரும் மறுபேரும் அவற்றை நாள்தோறும் காலமே 6 மணிக்கும் 8 மணிக்குமிடையில் தங்கள் தங்கள் வீடுகள் தொழில்சாலைகளுக்குப் புறத்தே றேட்டருகில் சரியான பெட்டிகளில் அல்லது வேறு கொள்கலத்தில் போட்டுவைக்கவேண்டும்.

யாதாமொருவர் அப்படிப்பட்ட தூசி சாம்பர் குப்பை கஞ்சல் அல்லது கூழத்தை மேலேசொல்லியபடி பெட்டியில் அல்லது கொள்கலத்தில் வைத்தாலன்றியும் குறிக்கப்பட்ட நேரத்திற்குப்பின்னும் யாதொரு தெருவில் வைப்பது அல்லது வைப்பிப்பது நீதியாயிராது.

ஒவ்வொருவரும் அப்பெட்டிகளை அல்லது கொள்கலங்களைத் தெருக்கூட்டிகள் அவற்றை வெறுமையாக்கியபின் அரை மணித்தியாலத்துக்குள் அகற்றிப்போடவேண்டியது.

7. சுகசங்கத்தாரின் எல்லைக்குள்ளிருக்கும் யாதொரு வீடு கட்டிடம் அல்லது அடைப்பு அல்லது இடமுடையவனை அல்லது அவற்றில் குடியிருப்பவரை அக்கிராசனர் எந்தக்காலத்திலாவது அந்த வீட்டில் அல்லது கட்டிடம் அடைப்பு அல்லது இடங்களில் அல்லது அவற்றிற்குச்சேர்ந்த கக்கூசுகுழி அல்லது சிறுநீர்கழிக்குமிடத்தின் அழுக்குகளை அக்கிராசனரெழுத்தில் நொத்தீசால் அந்நொத்தீசில் கண்டிருக்கிற நேரத்துக்குள் அதிற்சொல்லப்பட்ட இடம் அல்லது இடங்களுக்கு அகற்ற அல்லது அகற்றுவிக்கக்கேட்பது நீதியாகும். சொந்தக்காறன் அல்லது குடியிருப்பவன் அவனுக்கு நொத்தீசு கொடுக்கப்பட்ட நேரத்திலிருந்து ஏழு நாட்களுள் நொத்தீசின்பிரகாரம் வேண்டியவைகளைச் செய்யத்தவறினால் அக்கிராசனர் வேண்டிய வேலைகளைச் செய்விக்கலாம். அம்முகாந்திரத்துக்காக வேண்டிய கூலிஆட்கள் கருவிகள் சாமான்களுடன் வீடுகள் வெளிவீடுகள் கட்டிடங்கள் அடைப்புகள் இடங்களிலும் அவைகளுக்குள்ளும் உட்செல்ல அக்கிராசனருக் கதிகாரமுண்டு. அதில் செல்லும் செலவு சொந்தக்காரனால் சங்கத்துக்கு செல்லுமதியான கடனைப்போல அறவிடப்படும்.

8. கக்கூசு, மலசலகூடம், குழி, அல்லது சிறுநீர்கழிக்குமடைப்புகளிலுள்ள சாமானை வீடுகட்டிடம் அல்லது வளவுக்குள் அல்லது குடியிருக்கும் வீடு கிணறு நீரோட்டம் அல்லது வாய்க்காலின் 100 அடிக்குள் புதைக்கும் அல்லது புதைப்பிக்கும் அல்லது போடும் அல்லது போடுவிக்கும் எவரும் குற்றத்துக்குள்ளாவார். அறிவித்தல் பெற்றுக்கொண்டவுடன் அவற்றை அக்கிராசனர் சொல்லும் நேரத்துக்குள் அவர் குறிக்குமிடத்தில் அகற்றவேண்டும். குறிக்கப்பட்ட காலத்துக்குள் கொந்திசின் கேள்விப்படி செய்யாவிடில் அக்கிராசனரும் அவரால் அதிகாரங்கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது தொழிலாளர் அந்த வீடு கட்டிடம் அல்லது இடங்களில் புகுந்து தேள்வையான வேலைகளைச் செய்விக்கலாம். அதினால் சொல்லும் செலவு அதுசெய்யத் தவறினவரா லிறுக்கப்படும். அது அவனால் விசாரித்துத் தீர்மானிக்கப்படும். சங்கத்துக்குச் சொந்தக்காறனால் செல்மதியான கடனைப்போ லறவிடப்படும்.

9. யாதொரு வீடு அல்லது இடத்துக்குள் அல்லது அவடத்தில் யாதொரு மாடு குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது பன்றி செத்தால் குடியிருப்பவர் அது செத்து நாலு மணித்தியாலத்துக்குள் இரவில் செத்தால் விடிந்து நாலு மணித்தியாலத்துள் அப்பிணத்தை தன்சொந்தச் செலவில் அதற்கென்று அக்கிராசனரால் நியமிக்கப்படுமிடத்திற்கு அகற்ற வேண்டும், அல்லது சங்கத்தின் அதிகாரிக்கு மரணத்தை அறிவிக்கவேண்டும். பிந்தினவிதமானால், பிணத்தை அகற்றி அடக்கஞ்செய்யுஞ் செலவுகளை அக்கிராசனர் தீர்மானிக்கும் விகிதத்தில் கொடுக்கவேண்டும்.

10. சகல கக்கூசுகளும் வாழி மணல்பாவிக்கும் கிரமமாயிருக்கும் வாழி மணல் பாவிக்கும் முறையுள்ள கக்கூசை உடைய அல்லது பாவிக்கும் ஒவ்வொரு வீட்டுக்காறன் சொந்தக்காறன், வாடைகொடுத்திருப்பவன் அல்லது குடியிருப்பவன் சங்கத்தின் அக்கிராசனருடன் மறு ஒழுங்குபண்ணிக்கொண்டா லொளிய சுகசங்கத்தாரின் நாகல் குழியிடத்தில் நாளாந்தம் போடவேண்டியது.

11. சுகசங்கத்தின் எல்லைகளுக்குள் யாதொரு மரம் கொப்பு அல்லது காய் அக்கிராசனரால் பார்வையிடப்பட்டபின் ஏதொரு வீடு அல்லது கட்டிடத்தின்மேல் விழுந்து அதில் குடியிருப்பவர்களை எப்பவாகுதல் தீங்குசெய்யக் கூடியதாயிருக்குமென்று தீர்மானித்தால், அல்லது யாதொரு தெருவின்மேல் எப்பவாகுதல் தொங்கிநிற்குமாகில் அந்த மரத்தை, கொப்பை அல்லது காயை வெட்டி அகற்றும்படி அந்த மரம் நிற்கும் நிலத்தின் சொந்தக்காறன் அல்லது அதில் குடியிருப்பவனுக்கு எழுத்தில் நொத்தீசு கொடுக்கும்படி செய்வதும் அப்படி நொத்தீசு கொடுபட்டு 24 மணித்தியாலத்துக்குள் சொந்தக்காறன் அல்லது குடியிருப்பவன் வெட்டி அகற்றாவிடில் அக்கிராசனர் அல்லது அவரால் எழுத்தி லதிகாரங் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தன் அல்லது தொழில்காறனும் அவ்விடத்திற்சென்று அவ்வேலையைச் செய்விக்கலாம். அதனால் உண்டான செலவு அப்படியான சொந்தக்காறன் அல்லது குடியிருப்பவனால் கொடுபடவேண்டியது. விசாரித்துத் தீர்மானித்து சொந்தக்காறன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய கடனாக அறவிடப்படும்.

### அத்தியாயம் X. 1862 ம் 15 ம் இலக்க 3 ம் பிரிவு.

ஆரோக்கியமில்லாத மாமிசம் மீன் அல்லது வேறுபண்டங்கள் நகர்த்தில் அல்லது கிராமத்தில் அல்லது அங்கே விற்பனவுக்கு வைக்கப்பட்டிருந்தால் பறிமுதலாக்கி நடுககட்டுவதற்கு.

சங்கத்தின் யாதொரு அங்கத்தவர் அதிகாரி அல்லது அக்கிராசனரால் அதிகாரங் கொடுக்கப்பட்ட எவரும் உதவியாள்கொண்டு அல்லது தனிமையாய் நியாயமான என்னேரத்திலும் யாதொரு சந்தை கட்டிடம் சாய்ப்பு தொழுவம் அல்லது இறைச்சி வீட்டுப்பறவை மீன் கனி அல்லது காய் பிஞ்சு விற்கிறதற்குப் பாவிக்கும் அல்லது மிருகங்களைக் கொல்வதற்காகப் பாவிக்கப்படும் இடங்களுக்குப் போய்ப் பார்வையிடவும் அங்கிருக்கும் யாதொரு மிருகங்களின் பிணத்தை

இறைச்சியை வீட்டுப்பறவையை வேட்டையாடிய மிருகத்தை மாமிசத்தை மீனைக் கனியை அல்லது காய்கனியை சோதிக்கத் தத்துவங் கொடுக்கப்படுகிறது, யாதொரு மிருகம் பிணம் இறைச்சி வீட்டுப்பறவை வேட்டையாடிய மிருகம் மாமிசம் மீன் கனி காய் பிஞ்சு மனிதரின் உணவுக்கு வைத்திருக்கிறதாகவும் உணவுக்குத்தக்கதாயுங் காணப்பட்டால், பிடித்துக்கிட்டவிருக்கும் டாக்குத்தர், கிராமக்கோட்டு நீதவான், அல்லது பொலிஸ் நீதவானிடம் கொண்டுபோய் அப்படிப்பட்ட டாக்குத்தருக்கு அல்லது கிராமக்கோட்டு நீதவானுக்கு அல்லது பொலிஸ் நீதவானுக்கு மனுஷரின் போசனத்துக்காகக் கருதப்பட்டிருக்கிற மிருகம் பிணம் இறைச்சி வீட்டுப்பறவை வேட்டையாடிய மிருகம் மாமிசம் மீன் கனி அல்லது காய் கனி அப்படியான போசனத்துக்குத் தகாதெனக் காணப்பட்டால், அவற்றை அழித்துப்போட அல்லது விற்பனவுசெய்ய அல்லது போசனத்துக்கு பாவிப்பதைத் தடைசெய்யத்தக்கதாய் நாசப்படுத்தக் கட்டளைபண்ணலாம்.

---

இடாப்பு. அட்டவணை A.

சந்தைக்குவெளியே விற்கிறதற்கு உத்தரவுச்சீட்டின் மாதிரி.

ரூபாய் ——— கொடுக்கப்பட்டு ——— சுகசங்கத்தாரின் ——— திகதியில் விதியாக்கப்பட்ட நிச்சயிப்பினுல் ——— இடத்தில் ——— துவக்கம் ——— வரைக்கும் ——— விற்க இத்தால் உத்தரவுபண்ணப்பட்டிருக்குது.

———

சுகசங்கத்தாரின் அக்கிராசனர்.

அட்டவணை B.

சலார் ரூ. ———.

உபபிரமாணங்களுக்கமைய ——— சந்தையில் ——— இல, ——— கடையை சுயாதீனமாக இத்தைக்கொண்டு செல்லும் ——— இருக்கும் ——— உத்தரவுபெற்றிருக்கிருர்.

———

சுகசங்க அக்கிராசனர்.

---

[By-laws made by the Assistant Government Agent, Matara, relating to Slaughter of Cattle, &c., Weligama, Matara District.]

தென் மாகாணம் மாத்தறை டிஸ்திறிக்கின் வலிகாம நகரத்திற்கு மாடும் மறு மிருகங்களும் கொலைசெய்வதைப்பற்றியும் ஸ்தானத்தின் ஆரோக்கியமும் ஒழுங்குகளுக்காகவும் 1893 ம் ஆண்டின் 9 ம் இலக்கச் சட்டத்தின் 23 ம் பிரிவின்கீழ் மாத்தறை உதவி ஏசன்றுத்துரையவர்களால் உண்டாக்கப்பட்ட பின்வரும் உப பிரமாணங்கள் சட்டபரிபாலனைச் சங்கத்தின் புத்திமதியுடன் உச்சிதந்தங்கிய அரசாட்சி பரிபாலன உத்தியோகஸ்தரினுல் அனுமதிக்கப்பட்டுச் சனங்களறியும்படி இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

தேசாதிபதி யவர்களின் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
1912 ம் ஹூ (ஐ-ஹன்) ஆனிமீ 15 ந் உ.

ஹியூ கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

தென் மாகாணம் மாத்தறை டிஸ்திறிக்கின் வலிகாம் நகரத்துக்காக மாடும் மறு மிருகங்களும் இறைச்சிக்கடிப்பதைப்பற்றியும் மாடடி வீடுகளின் ஆரோக்கியத்தைப்பற்றியும் 1893 ம் ஆண்டின் மாடடிக் கட்டளைச்சட்டத்தின் 23 ம் பிரிவின்கீழ் மாத்தறை உதவி ஏசன்றுத்துரை யவர்களால் உண்டாக்கப்பட்ட உபபிரமாணம்:—

1. வலிகாம நகரத்தில் ஆடு மாடு இறைச்சிக்கடிக்கும் யாபாரம் நடத்த உத்தரவுபெற்ற யாதொருவரும் திகபத்தவத்தையென்னு மிடத்தில் இருக்கும் பிரசித்த மாடடிவீட்டைவிட வேறோர் இடத்திலும் மாடு ஆடு கொலைசெய்யப்படாது.

2. 1893 ம் ஆண்டின் ஆடுமாடடிக்கும் கட்டளைச்சட்டத்தின் 12 ம் பிரிவின் 1 ம் கீழ்ப்பிரிவின்படி வலிகாமத்தில் ஆடுமாடு அடிக்க உத்தரவு பெற்றவர்கள் அடிப்பதற்கு எண்ணப்பட்ட சகல மாடுகளையும் அடிக்கிற நேரத்துக்கு அடுத்த முன்செல்லும் 24 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துக்குச் சனங்கள் பார்க்கும்படி விடவேண்டிய இடமாக பொருமா தோட்டத்திலுள்ள மாட்டுத் தொழுவம் இத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

3. பிரசித்த மாடடிவீடு வலிகாமத்து சுகசங்கத்தின் அதிகாரியின் பொறுப்பிலிருக்கும். அதனுடைய ஒழுங்குக்கும் ஆரோக்கிய நிலைக்கும் அவரே உத்தரவாதியாவார்.

4. மாத்தறை உதவி ஏசன்றால் தீர்மானிக்கப்பட்டு அதைப்பற்றி மாடடிவீட்டில் நொத்தீஸ் ஒட்டப்பட்டிருப்பதுமான மணித்தியாலங்களுக்கிடையிலன்றி அல்லது வலிகாமத்திலுள்ள பெரிய டாக்குத்தரால் அல்லது உதவி ஏசன்றால் அதற்காக நியமிக்கப்பட்ட ஆட்களால் மனுஷீக போசனத்துக்குக் கொல்லத்தக்கதென்று பார்வையிடப்பட்டு அனுமதிக்கப்பட்டாலன்றி யாதொரு மாடுகள் அல்லது ஆடுமாட்டடி வீட்டில் கொல்லக்கூடாது.

5. கொல்வதற்குத் தகாதென தள்ளப்பட்ட மாடுகள் உடனே அகற்றப்படவேண்டியது.

6. சொல்லப்பட்ட டாக்குத்தர் அல்லது மாத்தறை உதவி ஏசன்றால் நியமிக்கப்பட்டவர் யாதொருவர் மிருகத்தை அடிக்குமுன் நோயுள்ளதென்றும் அல்லது மனுஷீக போசனத்துக்குத் தகாதெனக் கண்டால் முன்சொன்னபடி அனுமதிக்கப்பட்டதாயிருந்தாலும் கொலைசெய்யாமல் தடுக்கலாம்.

7. மேலே சொல்லியபடி அனுமதிக்கப்பட்ட யாதொரு மிருகம் கொல்லப்பட்டு அதன் பிணம் நோயுள்ளதாய் மனுஷீக போசனத்துக்குத் தகாததாகக் காணப்பட்டால் குறித்த டாக்குத்தர் அல்லது மாத்தறை உதவி ஏசன்றால் நியமிக்கப்பட்ட யாரும் அந்த இறைச்சியை உடனே அழித்துப்போட அல்லது அதை விற்பனவுசெய்வதை அல்லது போசனத்துக்குப் பாவிப்பதைத் தடைசெய்யத்தக்கதாய் நாசமாக்கலாம்.

8. மாடடி வீட்டுக்குப் பொறுப்பாளியாயிருக்கும் உத்தியோகஸ்தன் மனுஷீக போசனத்துக்கு அடிக்கத் தகாததென மேலே சொல்லியபடி அனுமதிக்கப்படாத ஏதொரு மாட்டை அடிப்பதையும் அல்லது சொல்லப்பட்ட டாக்குத்தர் அல்லது மாத்தறை உதவி ஏசன்றால் நியமிக்கப்பட்டவர் 6 ம் பிரிவின்படி தடைசெய்யப்பட்ட மாடடித்தலையும் உத்தரவுசெய்யப்படாது.

9. உணவுக்குத் தகாததென டாக்குத்தரால் அல்லது உதவி ஏசன்றால் நியமிக்கப்பட்டவர் சொல்லிய ஏதொரு இறைச்சியை டாக்குத்தரின் அல்லது உதவி ஏசன்றால் நியமிக்கப்பட்டவரின் கட்டளைப்படியன்றி அடிவீட்டிலிருந்து அகற்றப்படாது.

10. பிரசித்த மாடடி வீட்டி லடிக்கப்படும் ஒவ்வொரு மாட்டுக்கு 50 சதமும் மறு மிருகங்களுக்கு 25 சதமுமான சலார் அறவிடப்படும். அச்சலார் தொழுவக்காறனுக்கு மிருகம் அடிப்பதற்குமுன்னமே கொடுக்கவேண்டியது. அவர் அதற்கு ஒரு அச்சடியன் பற்றுச்சீட்டுக் கொடுப்பார். அந்தப் பற்றுச்சீட்டு சுகசங்க அதிகாரிக்கு அல்லது மாடடி வீட்டுக் காவல்காறனுக்கு மிருகம் அடிப்பட்டதற்கு உறுதிச்சீட்டாகும்.

11. மாடடி வீட்டைப் பாவிக்கும் சகல இறைச்சி அடிகாறரும் அதைப் பாவித்தபின் நாள்வீதம் துப்பரவுபண்ணவேண்டியது.

12. மாடடி வீட்டுப் பராமரிப்புக்காறன் அடிவீட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சகல ஆடுமாடுகளின் ஓர் டாப்பு பின்காட்டப்பட்ட மாதிரியாய் வைத்திருக்கவேண்டியது:—

| மாட்டுத் துண்டின் இலக்கம் | விபரம் | நிறம் | வயசு | குறி | | மாடடிப்பவரின் பெயர் | பார்வையிட்ட தேதி | அடித்த தேதி | குறிப்புகள் | மாட்டுத் துண்டு ஏர்த்த உத்தியோகஸ்தனின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலப் பக்கம் | இடப் பக்கம் | | | | | |
| | | | | | | | | | | |

[Rules made by the Assistant Government Agent Matara, relating to Registration of Dogs, Weligama Town, Matara District.]

1901 ம் ஆண்டின் நாய்பதிவுக் கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவின்கீழ் தென் மாகாணம் மாத்தறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த வலிகாம நகரில் நாய் பதிவுசெய்தலைக் குறித்து மாத்தறை கவண்மேந்து உதவி ஏசன்றால் உண்டாக்கப்பட்ட பின்வரும் விதிகள் சனங்கள் அறியும்பொருட்டு இத்தால் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கு தென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தேசாதிபதி யவர்களின் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
1912 ம் ஹூ ஐ-ஹன்மீ 15 ந் உ.

ஹியு கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

1901 ம் ஆண்டின் 25 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவின்கீழ் நாய் பதிவுசெய்தலைக் குறித்து வலிகாம நகருக்காக மாத்தறை கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரையவர்களால் உண்டாக்கப்பட்ட விதிகள்:—

1. நாய்களின் பதிவு.—வலிகாம நகரத்தின் எல்லைக்குள் இருக்கும் சகல நாய்களும் மாத்தறை கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரையவர்கள் கந்தோரில் பதிவுசெய்யப்படும். அவைகள் பதிவுசெய்யப்படுவதற்குமுன் சக்கிடுத்தார் அல்லது இன்ஸ்பெக்றருக்கு முன்பதாக கொண்டுவரப்படும்.

2. பதிவு சலார்.—குறித்த எல்லைகளுக்குள் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு நாய்க்கும் வருடாந்தப் பதிவு சலார் சதம் 25 கொடுக்க வேண்டிய தாகும்.

3. பதிவுச்சீட்டு.—1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவில் சொல்லிய பதிவுப்பத்திரம், A என்ற அட்சரமுள்ள இதில் அணைக்கப்பட்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட மாதிரியிலிருக்கும்.

4. நாய் உடையவன் சங்கத்துக்கு அறிவிப்புக்கொடுக்கவேண்டியது.—நாயைத் தேடிக்கொள்ளும், வைத்திருக்கும், அல்லது ஆட்சிபண்ணும் ஒவ்வொருவரும் நாயை தேடிக்கொண்ட அல்லது ஆட்சிகொண்ட 21 நாட்களுக்குள் அதைப்பற்றிச் சங்கத்துக்கு அறிவித்தல் கொடுத்து அம்மிருகத்தின் பூரணமான விபரத்தைக் கொடுக்கவேண்டும்.

5. குடியிருப்பவர் டாப்பு எழுதவேண்டியது.—கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரையவர்கள் ஒவ்வொரு வருடத்திலும் பங்குனிமாசத்துக்குமுன் ஒவ்வொரு வீட்டுக்குடியிருப்பவரையும் அந்த வீட்டில் அல்லது அதற்குச்சேர்ந்த எந்த இடத்திலும் வைத்திருக்கப்பட்ட நாய்களின் தொகையையும் விபரத்தையும் அவை முறையே ஆர் ஆருக்குடையனவென்றுங் காட்டுகிற B என்ற அட்சரமுள்ள மாதிரியில் டாப்பெழுதும்படி கேட்க நீதியாகும். அப்படியான ஒவ்வொரு குடியிருப்பவரும் அப்படிக்கொத்த ஒரு அட்டவணைக்கணக்கை சரியான விபரங்களுடன் ஒழுங்காய் எழுதப்பட்டு மாதிரிப்பத்திரங் கிடைத்து ஒரு கிழமைக்குள் கொடுக்கக் கட்டுப்பாடுள்ளவராவர்.

6. பதிவுசீட்டைச் கொடுக்க மறுத்தல்.—தொற்றுநோய் அல்லது பற்றுநோயின் காரணத்தால் யாதொரு நாய் சனங்களுக்கு இடைஞ்சலை உண்டாக்குவதாக டாக்குத்தருடைய எண்ணத்திலிருந்தால் அந் நாயின் சொந்தக்காறனுக்குப் பதிவுச்சீட்டு கொடுக்க கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரை மறுக்கலாம்.

7. பதிவுச்சீட்டு கொடுக்க மறுக்கப்பட்டபொழுது கவண்மேந்து உதவி ஏசன்றர் நாய்களை அழித்துப்போடக் கட்டளைபண்ணலாம்.—பதிவுச்சீட்டுகளுக்குச் சேர்க்கவேண்டிய கொந்தீசுகள் கொடுபடாதவும், 6 ம் ஒழுங்கின்படி பதிவுசெய்தல் மறுக்கப்பட்டவும் ஒவ்வொரு நாயின் சொந்தக்காறர் நொத்தீசு கொடுக்கப்பட்டவுடன் சுகசங்கத்தாரின் கந்தோருக்கு நாயைக் கொண்டுவந்து, சரியான அதிகாரி தகுதியெனக்கண்டால் நாயைச் சேதம்பண்ணக் கட்டளைபண்ணலாம்.

8. நகர எல்லைக்குள் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு நாயும் பதிவு நொம்பரும் வருடமும் பதியப்பெற்ற முத்திரை வைக்கப்பட்ட கழுத்துப்பட்டியை அணிந்திருக்கவேண்டியது.—அப்படிப் பட்டி அணிந்திருக்கும் நாய் ஒன்றும் பிடிக்கிறதற்கு ஏதுவாயிராது. சுகசங்கக் கந்தோரில் பட்டி பதிவு செய்யும் ஒரு பதிவு டாப்புப் பொத்தகம் வைத்திருக்கப்படும்.

9. நாய்பட்டி கேட்கிற ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பட்டிககு 37 சதம் வாங்கிக்கொண்டு கவண்மேந்து உதவி ஏசன்றர் நாய்பட்டி கொடுக்கலாம்; வேறு செலவில்லாமல் சங்கத்தாரால் பட்டிக்கு முத்திரை வைக்கப்படும்.

10. கிரயமில்லாமல் பட்டிக்கு முத்திரை வைப்பது.—தன் நாய்க்குப் பட்டி கட்ட விரும்பும் ஒவ்வொருவரும் செலவு இல்லாமல் அந்த முத்திரையையும் நொம்பரையும் பெற்றுக்கொள்ளலாம்.

11. நாய்களை மறித்தல்.—1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ம் பிரிவின்கீழ் பிடிக்கப்பட்ட சகல நாய்களை கவண்மேந்து உதவி ஏசன்றரால் அதற்கு தத்துவங் கொடுக்கப்பட்ட ஆட்களுக்குக் கொடுக்கப்படவேண்டியது. அல்லது சுகசங்கத்தின் நாய்த் தொழுவத்தில் மறித்துவைக்கப்படவேண்டியது.

12. பிடிபட்ட நாயை பின் விடுதலைபண்ணச் செலவு.—கவண்மேந்து உதவி ஏசன்றரின் அதிகாரத்தைக்கொண்டு பிடிக்கப்பட்ட அலைந்து திரிகிற நாய்கள் அடைபட்டிருக்கும் முதல் நாளுக்கு 50 சதமும் மற்ற ஒவ்வொரு நாளைக்கு அல்லது ஒரு நாளின் பகுதிக்கு 25 சதமும் பதிவு சலாரைவிட கொடுக்காமல் சொந்தக்காறனுக்குத் திரும்பக் கொடுக்கப்படமாட்டா.

13. பதிவுசெய்யப்படாத நாய்களின் சொந்தக்காறரைத் தலைமைக்காறர் றிப்போட்டுப்பண்ணவேண்டியது.—பதிவுசெய்யப்படாத நாய்களை உடையவர்களின் பேரும் விலாசமும் நகரத்துக்குள்ளிருக்கும் சகல பொலிஸ் தலைமைக்காறரும் கோறணமேந்து உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கு றிப்போட்டுப்பண்ணவேண்டியது.

14. குடியிருப்பவர்கள் சொந்தக்காறரில்லா நாய்களை ஒப்புவிக்கவேண்டியது.—யாதொரு வீட்டில் குடியிருப்பவன் அவடத்தில் காணப்படும் உரிமைபடுத்தப்படாத நாய்களை அதிகாரிக்குக் கேட்டநேரமே நாயைக் கொடுக்கவேண்டியது. அவ்வதிகாரி மிருகத்தை எவ்வகை செய்யவேண்டுமென்று தீர்மானிப்பார்.

15. பதிவு பத்திரத்தின் கொந்தீசுகள் கொடுபடும் நாய்களின் பதிவு பத்திரங்கள் பின்வரும் கொந்தீசுகளுக்கமைய விருக்கும்.—சொந்தக்காறனின் விளச்சத்துக்கு நொத்தீசு விட்டபின் கோறணமேந்து உதவி ஏசன்றுத்துரையவர்களால் பதிவுப்பத்திரம் அழித்துப்போட இடமாகும்:—

(a) நாய் சொஸ்தப்படுத்தக்கூடாத விதமாய் அங்கசேதம் அல்லது நோய்கொண்டதாய் சீவிக்கத் தகாதென்று கவண்மேந்து உதவி ஏசன்றர் அல்லது டாக்குத்தர் எண்ணத்திலிருந்தால்;

(b) நாய் சொந்தக்காறனினால் வழக்கமாய் வதைசெய்யப்பட்டு இடைவிடாமல் அசட்டைபண்ணப்படுகிறதென்று கவண்மேந்து உதவி ஏசன்றர் திருத்திபட்டுக்கொண்டால்;

(c) நாய் தொற்றுநோய் அல்லது பற்றுநோய்களால் வருந்தும்பொழுது அந்நேரத்தில் மறுபேருடைய நாய்களுடன் சேர சொந்தக்காறனால் விடப்பட்டாலும்.

## இடாப்பு A.

### நாய்களின் பதிவு நிச்சயச் சீட்டின் மாதிரி.

——— ம் இலக்க வீட்டிலிருக்கும் ——— கீழே காணப்படும் விபரத்தையுடைய (நாய் அல்லது நாய்கள் காரியமிருக்கிறபடி) இந்தக் கந்தோரில் இன்று பதிவுசெய்திருக்குதென்றும் அதற்காக பதிவுச்சலார் ரூ ——— கொடுபட்டிருக்குதென்றும் இத்தால் உறுதிப்படுத்தியிருக்குது.

## இடாப்பு B.

### நாயின் விவரம்.

சாதி ———. ஆணோ பெண்ணோ ———. நிறம் ———.

இந்த உறுதிப்பத்திரம் 191 —— ம் ஆண்டு பங்குனிமீ 31 ந் தேதி வரைக்கும் பெலப்புற்றிருக்கும்.

மாத்தறை, 191 —— ம ஸூ ——— மீ — ந் வ.

### மாதிரி B.

| | |
|---|---|
| இலக்கம் ———.<br>வீட்டின் இலக்கம் ———.<br>தெரு ———.<br>கிராமத்தின் பெயர் ———.<br>தோட்டத்தின் பெயர் ———.<br>குடியிருப்பவர் பெயர் ———. | இலக்கம் ———.<br>அட்டவணைக் கணக்கு 191 — ம் ஆண்டு ——— மீ — ந் திகதிக்குப்பின் உடனே முடித்து 191 — ம் ஆண்டு ——— மீ — ந் திகதிக்குமுன் ——— க்கு அனுப்பப்படவேண்டும்.<br>வீட்டு இலக்கம் ———.<br>தெரு ———.<br>கிராமப் பெயர் ———.<br>தோட்டப் பெயர் ———.<br>குடியிருப்பவரின் பெயர் ———. |

| நாய்களின் தொகை | நாய்களின் இல. | விபரம் | | | குறிப்பு | சொந்தக்காறன் பெயர் | பணம் இறுப்பனவுத் திகதி —— இல் அல்லது —— க்கு முன் |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | | | |
| 1 | | | | | | | |
| 4 | | | | | | | |
| 5 | | | | | | | |

| | |
|---|---|
| | ——— குடியிருப்பவரின் கையொப்பம். |
| கொடுபட்ட தேதி:<br>19 — ம் ஸூ —— மீ — ந் வ. | கொடுபட்ட தேதி: 19 — ம் ஸூ —— மீ — ந் வ.<br>மேலே சொல்லப்பட்ட வீட்டுக்காறன் மேலே காட்டப்பட்ட அட்டவணைக் கணக்கை நிரப்பி இவ்று தொடக்கம் ஒரு கிழமைக்குள் அனுப்பும்படி வேண்டப்படுகிறார். அப்படிச் செய்ய அசட்டைபண்ணுபவர் —— ரூபாய் தெண்டத்துக்கு இடமாவார்.<br>191 —— ம் ஸூ —— மீ — ந் வ. ——— கையொப்பம். |

# LAND SALES.

## காணி விற்பனவுகள்.

**No. 671, N. P.**—1912 ம் ஆண்டு ஆவணிமாதம் 27 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும். 4 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் சரசாலை முதலிய பகுதியிலிருக்கின்றது.

ஒடுக்குப்பணம் கட்டத்தவறிய நிலங்கள்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | ஒடுக்குப்பணம் கட்டத்தவறியவரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | ஏக்கரொன்றின் பாண்ணிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலககம் 3,758. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 317 | ஊர்வணிகன்பற்று .. | வயிரமுத்து அருளம்பலம் .. | காடு .. | 2 | 0 | 21 | 16 |
| | | பிளான் இலக்கம் 3,789. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 419 | நெடுந்தீவு நடுக்குறிச்சி | தொம்மை அந்தோணி .. | தரிசுநிலம் .. | 2 | 0 | 38 | 15 |
| | | பிளான் இலக்கம் 3,813. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 485 | கொக்குவில் கிழக்கு .. | வயித்தியலிங்கம் ஐயாத்துரை | வறண்டகுளம் .. | 0 | 1 | 32·75 | 320 |
| 484 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 1 | 12·5 | 320 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசன்றுத்துரை அவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பு, 1912 ம் வருஷம் ஜூலைமீ 18 ந் உ.

ஹியூ கிளிவ்வோட,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 672, N. P.**—1912 ம் ஆண்டு ஆவணிமாதம் 30 ந் திகதி, மன்னாரில், தன் ஆபிசில், வட மாகாணத்து உதவிக் கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியுாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும். 23 காணித்துண்டுகள், வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கின் நானாட்டான் கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,830. நானாட்டான் கிழக்கு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 516 | சுண்டிக்குளி .. | — .. | ருேட்டுக்காகத் தவிர்த்து வைத்தது .. | 0 | 0 | 37 |
